/ பதிவு தபால் ஒப்புதலுடன் /

வேர்கிளம்பிபேரூராட்சி அலுவலகம்

ந.க.எண்.267/2021/அ1

நாள் 02.06.2022

## ஒப்பந்த புள்ளி அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம் வேர்கிளம்பி முதல் நிலை பேரூராட்சியில் பொது நிதி 2022–23 ல், கீழ்காணும் வேலைகள் செய்வதற்கு தகுதி வாய்ந்த இப்பேரூராட்சியில் பதிவு செய்துள்ள I, II, & III வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வேர்கிளம்பி பேரூராட்சி செயல்அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலரால் 16.06.2022 வியாழக்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்று பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்ததரார்கள் முன்னிலையில் திறக்கப்படும். வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் **http://tenders.tn.gov.in** என்ற இணையதள முகவரிகளிலிருந்து 15.06.2022 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து எடுத்துக் கொள்ளலாம். மேற்படி பணிகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த கூடுதல் விவரம் அறிய விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## பொதுவானநேரம் மற்றும் நாள்

| | | |
|---|---|---|
| அ) ஒப்பந்த நமூனாஇறக்கம் செய்தல் | : | 15.06.2022 மாலை 5.00 மணிவரை |
| ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்பித்தல் | : | 16.06.2022 மாலை 3.00 மணிவரை |
| இ) ஒப்பந்த விலைப்புள்ளி திறத்தல் | : | 16.06.2022 மாலை 3.30 மணி |

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப் புள்ளி படிவம் பேரூராட்சி அலுவலகத்தில் 15.06.2022 அன்று பிற்பகல் 3.00 மணிவரை உரியத் தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

2. ஒப்பந்தப் புள்ளியின் இனத்தினை கவரில் குறிப்பிட வேண்டும்.

3. மதிப்பீட்டில் 1% டேவணித் தொகையை வங்கி வரைவோலையாக **Executive Officer, Verkilambi First Grade Town Panchayat** என்ற முகவரியில் எடுத்து பாரத மாநில வங்கி, கோதநல்லூர் கிளையில் (State Bank of India, Kothanallur) மாற்றத்தக்க வகையில் வங்கி வரைவோலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும்.

4. ஒப்பந்தக்காரர் தரச்சான்று (Class Certificate) தொழில்நுட்ப புள்ளியில் இணைக்கப்பட வேண்டும்.

5. வரப்பெற்ற ஒப்பந்தங்களில் விலைப்புள்ளி 16.06.2022 அன்று மாலை 3.30 மணிக்கு பேரூராட்சி அலுவலகத்தில் ஆஜராகி இருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலிக்கப்படும்.

6. குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தில் அங்கீகாரம் பெற்றவுடன் வேலைக்கான உத்தரவு வழங்கப்படும்.

7. வேலை கிடைக்கப்பெற்றவர் 1% கூடுதல் வைப்புத்தொகை வங்கி வரைவோலையாக செலுத்திரூ.60/–க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதிவைத்து வேலையை ஆரம்பிக்கவேண்டும்.

8. குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரரால் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித்தொகை பறிமுதல் செய்ததாகக்கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

9. பணி குறித்த விபரங்கள் அடங்கிய தரமான பலகைகள் 4 அடி x 21/2 அடி (1.20M x 0.75M) அளவில் பணி நடைபெறும் இடத்தில் அமைக்கப்பட வேண்டும். அதற்கான புகைப்படம் பட்டியல் பெறப்படும்போது இணைக்கப்பட்டு இருக்க வேண்டும்.

10. வேலைக்கான உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்கவேண்டும். இல்லையென்றால் வேலையை ரத்துச்செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு முழுஅதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக்காரர்களே முழு பொறுப்பாவார்கள்.

11. இத்திட்டப்பணி முடிக்கப்பட்ட பின்னர் தணிக்கை முடியும் வரை ஏற்படும் குறைபாடுகளை இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரரே தனது சொந்தச் செலவில் சீரமைக்க வேண்டும்.

12. Engineering Manual படி பணிக்கான ஒப்பந்தகாலத்திற்குள் பணியினை ஒப்பந்தகாரர் மந்தமான முறையில் மிகமெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் (Penalty for slow progress) அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதித்து பட்டியல் தொகையில் ஈடுசெய்யப்படும்.

13. Engineering Manual படி ஒருபொறியியல் பட்டம் கட்டிடபொறியியலில் தேர்ச்சி பெற்ற பொறியாளரை பணிதுவங்கி முடிக்கும் நாள் முடிய இப்பணிக்கு ஈடுபடுத்தப்பட்டு மதிப்பீட்டு தொகைக்கு உட்பட்டு பணியினை முழுமையாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் ஒப்பந்ததாரரிடம் மாதம் ஒன்றுக்கு ரூ. 3,000/– பிடித்தம் செய்து பட்டியல் தொகையில் ஈடு செய்யப்படும்.

14. ஒப்பந்தக்காரர் குடிநீர் திட்ட பணி தொடர்பான ஏற்கனவே பணிசெய்ததற்கான தணிக்கையாளர் சான்றொப்பமிட்ட நகல் இணைக்க வேண்டும் (Audited balance sheet for 5 years).

15. அனைத்து சான்றுகளும் சான்றொப்பம் செய்யப்பட்டு இருக்க வேண்டும்.

16. வருமான வரிசான்று, GST எண் நகல் இணைக்கப்படவேண்டும்

17. ஒப்பந்தாரர்கள் 2022–23 ஆம் நிதி ஆண்டுக்கு ஒப்பந்த பதிவு பெற்றிருத்தல் அவசியம்.

18. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும் பணிநடைபெறும் போதும் மற்றும் பணிமுடித்த பின்னரும் புகைப்படம் எடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படவேண்டும். எடுக்கப்படும் மூன்று புகைப்படமும் ஒரே இடத்தை காட்டும்படியாக இருத்தல் வேண்டும்.

19. பணிக்கு உபயோகப்படுத்தும் பொருட்கள் (பைப்பு உட்பட) ஒவ்வொரு நிலையிலும் அரசு தொழில்நுட்ப கல்லூரி சோதனைக் கூடத்தில் தரசான்றிதழ் பெறப்படவேண்டும்.

20. எக்காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளி வரவழைப்பு நிறுத்தி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ நிர்வாக அதிகாரிக்கு முழு அதிகாரமுண்டு.

21. கூடுதல் விபரம் அறியவிரும்புவோர் அலுவலக நாட்களில் நேரில் வந்து பணி நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

<u>பட்டியல்</u>

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த மதிப்பீடு தொகை (ரூ) | டேவணித் தொகை ரூ | ஒப்பந்த நமுனா ரூ | ஒப்பந்தக் காரரின் தகுதி |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | குமரன்குடி சாலை கி.மீ.0/2 – 3/6 பூவன்கோடு முதல் தாணிவிளை வரையிலான சாலை ஓரம் புதிதாக குடிநீர் பைப் லைன் அமைத்தல். | 14,00,000/– | 14,000/– | 6240/– | IV & V ம் வகுப்பு |

பா.சிவகுமார் 2/6/2022
செயல் அலுவலர்,
**வேர்கிளம்பி முதல் நிலை பேரூராட்சி.**

<u>பெறுநர்</u>

வேர்கிளம்பி பேரூராட்சியில் பதிவுபெற்ற
அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும்.

<u>நகல்</u>

1. திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து பேரூராட்சி அலுவலக தகவல் பலகைக்கு.
2. நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
3. உதவி செயற் பொறியாளர் ( பேரூராட்சிகள் ) நாகர்கோவில் தகவலுக்கு.
4. இளநிலை பொறியாளர் குலசேகரம் தேர்வு நிலை பேரூராட்சி தலைமையிடம் தகவலுக்கு.
5. தலைவர் வேர்கிளம்பி முதல் நிலை பேரூராட்சி
6. வட்டாட்சியர் அலுவலகம், திருவட்டார் தகவலுக்கு.
7. லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புத்துறை, நாகர்கோவில் தகவலுக்கு.
8. விளம்பர பலகைக்கு